செங்கோட்டை நகர்மன்றத்தின் அவசரக்கூட்டம் 04.11.2020 அன்று முற்பகல் 11.00 நடைபெற்றதன் கூட்ட நடவடிக்கைகள்

தலைமை. செல்வி. வே. நித்யா B.Tech., M.B.A., தனி அலுவலர் அவர்கள்.

மன்றபொருள்

அரசாணை எண் 298 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை 02.09.2020 ன் படி கொரோனா நோய் தொற்று பரவல் தடுப்பின் காரணமாக அரசால் பிறப்பிக்கப்பட்ட பொது ஊரடங்கு காலமான 01.04.2020 முதல் 31.05.2020 வரை உள்ள காலத்திற்கு உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படாத கடைகள்/வரியில்லா இனங்களுக்கு வாடகை தொகையினை செலுத்துவதிலிருந்து விலக்க அளித்து உத்திரவிடப்பட்டுள்ளது. இந்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது கடிதம் 8763/2020/ஆர்2 நாள்.28.09.2020 வழிகாட்டுதல் நெறிமுறைகளின் அடிப்படையிலும் அரசாணை தெரிவித்துள்ளவாறும் ஊரடங்கு காலத்தில் 01.04.2020 முதல் 31.05.2020 முடிய உள்ள காலத்தில் செயல்படாத கடைகள்/வரியில்லா இனங்கள் வகை மற்றும் கேட்புத்தொகையுடன் கூடிய பட்டியல் தயார் செய்யப்பட்டு இந்நகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட குழு மூலம் 14.10.2020 அன்று உறுதி செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வரி விதிப்பு எண். | குத்தகை இனங்கள் வாரியாக (கடைகள் /. வாரச்சந்தை / கட்டண கழிப்பிடங்கள் / பேருந்துகள் நுழைவு கட்டணம் / தினசரி சந்தை / சைக்கிள், வாகனம் நிறுத்தங்கள் மற்றும் இதர இனங்கள் வாரியாக |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 1 | 144/10113 | M.ABDUL RAHUMAN-BUSSTAND SHOP 49 C |
| 2 | 144/10114 | P MANIAN-BUSSTAND SHOP SHOP 49 L |
| 3 | 144/10115 | BALASUBRAMANIAN-BUSSTAND SHOP 49 K |
| 4 | 144/121310 | PITCHURAJ-VEG HOTEL IN BUSSTAND |
| 5 | 144/12132 | K.ESAKKI RAJAN-BUSSTAND SHOP 49 P |
| 6 | 144/502 | P.V.NATARAJAN-WEEKLY MARKET FRONT SHOP 1 |
| 7 | 144/503 | HARIHARA SUBRAMANIAN-WEEKLY MARKET FRONT SHOP 2 |
| 8 | 144/504 | D.RAJ-WEEKLY MARKET FRONT SHOP 3 |
| 9 | 144/505 | KUMARASAMY-WEEKLY MARKET FRONT SHOP 4 |
| 10 | 144/506 | ARUMAINAYAGAM-WEEKLY MARKET FRONT SHOP 5 |
| 11 | 144/507 | GNANADURAI-WEEKLY MARKET FRONT SHOP 6 |
| 12 | 144/508 | P.V.NATARAJAN-WEEKLY MARKET FRONT SHOP 7 |
| 13 | 144/509 | P.V.NATARAJAN-WEEKLY MARKET FRONT SHOP 8 |
| 14 | 144/510 | P.V.NATARAJAN-WEEKLY MARKET FRONT SHOP 9 |
| 15 | 144/511 | P.GANESAN-WEEKLY MARKET FRONT SHOP 10 |
| 16 | 144/513 | SYED SULAIMAN-DAILY MARKET INSIDE SHOP 5 |
| 17 | 144/514 | E.THAKSHANA MOORTHY-DAILY MARKET INSIDE SHOP 6 |
| 18 | 144/515 | E.BALASUBRAMANIAN-DAILY MARKET INSIDE SHOP 7 |
| 19 | 144/516 | P.CHELLADURAI-DAILY MARKET INSIDE SHOP 8 |
| 20 | 144/517 | P.CHELLADURAI-DAILY MARKET INSIDE SHOP 9 |
| 21 | 144/518 | P.CHELLADURAI-DAILY MARKET INSIDE SHOP 10 |
| 22 | 144/519 | ESAKKIMUTHU-DAILY MARKET INSIDE SHOP 11 |

| | | |
|---|---|---|
| 23 | 144/520 | ESAKKIMUTHU-DAILY MARKET INSIDE SHOP 12 |
| 24 | 144/521 | AYYAPPAN-DAILY MARKET OUTSIDE SHOP 1 |
| 25 | 144/522 | MANIKANDAN-DAILY MARKET OUTSIDE SHOP 2 |
| 26 | 144/523 | P.CHELLADURAI-DAILY MARKET OUTSIDE SHOP 3 |
| 27 | 144/524 | S.P.AYYAPPAN-DAILY MARKET OUTSIDE SHOP 4 |
| 28 | 144/525 | P.NIRMAL KUMAR-DAILY MARKET OUTSIDE SHOP 5 |
| 29 | 144/526 | P.ALAGAIAH-DAILY MARKET OUTSIDE SHOP 6 |
| 30 | 144/529 | MOHAMED PANNAIR-DAILY MARKET OUTSIDE SHOP 9 |
| 31 | 144/530 | SUBBAIAH PILLAI - DAILY MARKET OUTSIDE SHOP10 |
| 32 | 144/531 | PONNUSEENI-DAILY MARKET OUTSIDE SHOP 11 |
| 33 | 144/537 | KASTHURIBAI WOMEN & CHILD HOME-SJSRY BUILDING |
| 34 | 144/544 | N,KANIYATHA-INSIDE BUSSTAND VST SHOP 1 ( 10 X 4 ) |
| 35 | 144/548 | P.V.NATARAJAN-NV HOTEL IN BUSSTAND |
| 36 | 144/549 | MURUGAIAH-BUSSTAND OUTSIDE SHOP 1 |
| 37 | 144/550 | S.P.SUBBIAH-BUSSTAND OUTSIDE SHOP 2 |
| 38 | 144/553 | SECRETARY SANKARANKOIL SARVOTHAYA SANGAM-BUSSTAND SHOP 49D |
| 39 | 144/554 | T.SUBBIAH PILLAI-BUSSTAND SHOP 49 E |
| 40 | 144/556 | P.V.NATARAJAN-BUSSTAND SHOP 49 G |
| 41 | 144/557 | VIVEKANANDAN-BUSSTAND SHOP 49 H |
| 42 | 144/558 | S.SELVARAJ-BUSSTAND SHOP 49 J |
| 43 | 144/561 | SECRETARY SANKARANKOIL SARVOTHAYA SANGAM-BUSSTAND SHOP 49 M |
| 44 | 144/562 | THE BRANCH MANAGER , SETC-BUSSTAND SHOP 49 N |
| 45 | 144/564 | MATHIYALAGAN-BUSSTAND SHOP 49 Q |
| 46 | 144/567 | SARAVANA MUTHIAH-BUSSTAND SHOP 49 T |
| 47 | 144/568 | P.CHELLADURAI-BUSSTAND SHOP 49 U |
| 48 | 144/569 | P.CHELLADURAI-BUSSTAND SHOP 49 V |
| 49 | 144/577 | THENTRAL WOMEN AND CHILD-SJSRY-BUILDING-2 |
| 50 | 144/595 | L.ARUMUGAM-BUSSTAND SHOP 49 F |
| 51 | 144/609 | SYED SULAIMAN-BUS STAND OUTSIDE SHOP 3 |
| 52 | 144/610 | P.UDHAYA SANKAR-INSIDE BUS STAND VST TEA STALL(8X8 SHED) |
| 53 | 144/611 | S.BALAKRISHNAN-BUSSTAND SHOP 49 R |
| 54 | 144/703 | S.V.BALASUBRAMANIAN - BUSSTAND SHOP 49S |
| 55 | 144/704 | K.MOHAIDEEN BATCHA ANNAVI-FRONT OF MPL OFFICE SHOP |
| 56 | 144/BD01/00001 | Mohammed Ismail - AVENUE MUTHUSAMY PARK |
| 57 | 144/BD01/00002 | Subramanian L - BUS STAND CYCLE STAND |
| 58 | 144/BD01/00003 | S.Masanam - BUSSTAND CLOAK ROOM |
| 59 | 144/BD01/00004 | Mohammed Ismail -- AVENUE PUMPHOUSE |
| 60 | 144/BD01/00005 | Kannan B-BUS STAND TV ADVERTICEMENT |
| 61 | 144/BD01/00006 | NATARAJAN P V-WEEKLY MARKET FEES |
| 62 | 144/BD01/00007 | LAKSHMANAN K-BUS ENTRANCE FEES |
| 63 | 144/BD01/00008 | LAKSHMANAN K-BUSSTAND P&U TOILET |
| 64 | 144/BD01/00009 | P V Natrajan - ROADMARGIN |

அலுவலகக்குறிப்பு:-

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அரசாணை (ம) எண் 298 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.02.09.2020ஐ மன்றம் பதிவு செய்யலாம்.

மன்றப்பொருள்.

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 12609/2020/எல்அ3 நாள்.26,08.2020 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் 28.10.2020–ந் தேதிய வாட்ஸ்–அப் செய்தியில், 15 வது மத்திய நிதிக்குழு பரிந்துரைத் திட்டம் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு மான்யம் பெறுவதற்கு ODF + திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நகராட்சி என சான்று பெற்றிருக்க வேண்டும் என நிபந்தனைகள் விதிக்கப்பட்டு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், நகர்மன்றத்தில் திறந்தவெளியில் மலம் கழித்தலற்ற நகராட்சி என ஒப்புதல் பெறவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. செங்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 24 முடிய உள்ள வார்டுகளில் அனைத்து மக்களும் 100 சதவீதம் கழிப்பறையினை மட்டுமே பயன்படுத்தி வருகின்றனர் என்றும், திறந்தவெளியினை கழிப்பிடமாக பயன்படுத்தவில்லை என்றும் (ODF) அறிவிப்பு செய்து செங்கோட்டை நகராட்சியில் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் தற்போது பொது மக்கள் பயன்பாட்டில் உள்ள பொதுக்கழிப்பிடங்கள் மற்றும் சமுதாயக் கழிப்பிடங்கள் போதுமான அளவில் உள்ளது மற்றும் கழிப்பிடங்களில் ஏற்படும் பழுதுகள் அவ்வப்போது சரிசெய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. எனவே, செங்கோட்டை நகராட்சியை ODF + திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற பகுதி என அறிவிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்களின் கடிதங்களை பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மன்றம் அனுமதி வழங்கலாம்

மன்றபொருள்

செங்கோட்டை நகராட்சி பேருந்து நிலையத்தில் முதல் தளத்தில் உள்ள கடை எண் 49W பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பை 'தினமலர்' தினசரி நாளிதழில் பிரசுரம் செய்த வகைக்கான விளம்பர கட்டணம் ரூ.9408/– ஐ (ஒன்பதாயிரத்து நானூற்று எட்டு மட்டும்) மேற்படி நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு– (ந.க.எண்.3090/2015/வ.ஆ)**

1.மன்றம் அனுமதி வழங்கலாம்

2.மேற்படி செலவினத்தை வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

மன்றப்பொருள்.

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் 03.11.2020–ம் தேதிய மின்னஞ்சல் செய்தியில், செங்கோட்டை நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் குப்பையில்லா நகராட்சி என்ற நட்சத்திர அந்தஸ்து பெறுவதற்கு விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஏற்கனவே, செங்கோட்டை நகராட்சி பகுதியில் கடந்த 01.10.2019 முதல் குப்பைத் தொட்டிகள் அகற்றப்பட்டு குப்பைத் தொட்டிகள்

இல்லாத நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக செங்கோட்டை நகராட்சியில் சேகரமாகும் திடக்கழிவுகளை திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி முறையாக தரம் பிரித்து கையாளப்பட்டு வருகிறது. மேலும் Secondary Storage and Transportation செய்வது முற்றிலும் தவிர்க்கப்பட்டுள்ளது. எனவே, செங்கோட்டை நகராட்சியினை குப்பையில்லா நகராட்சியாக (Garbage free City) மூன்று நட்சத்திர அங்கீகாரம் (Three Star Rating) பெற சுய உறுதிமொழி சான்றிதழுக்கு (Self Declaration) நகர்மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது. மேற்படி அறிவிப்பினை நாளிதழ்களில் வெளியிடுவதற்கான விளம்பரக்கட்டணத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்களின் கடிதத்தை பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மன்றம் அனுமதி வழங்கலாம்

மன்றப்பொருள்.

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்கள் அலுவலக வாட்ஸ்-அப் செய்தியில் சிறப்பு சாலைத் திட்டம் 2020–2021-ன் கீழ், செங்கோட்டை நகராட்சி பகுதியிலுள்ள பழுதடைந்த சாலைகளை மேம்படுத்தும் பணி மேற்கொள்ள சாலைகள் தேர்வு செய்து மதிப்பீடு தயார் செய்து சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டதற்கிணங்க, கீழ்க்கண்ட சாலைகள் தேர்வு செய்யப்பட்டு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டதற்கும், மேற்படி சாலை பணிகளுக்கு உரிய அனுமதி வழங்கவும் கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பிக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | பெரியசாமி தெரு, சுப்பையா தெரு, பெரிய பள்ளிவாசல் தெரு, பூம்புகார் தெரு, காதர் ஒலி தெரு, முத்தழகிஅம்மன் கோவில் தெரு, டவுண்ஹால் ரோடு, வடக்கு ரத வீதி மற்றும் கொட்டாரம் ரோடு (வார்டு எண்.2,4,6,18,19,20,21,22 மற்றும் 23) தார் சாலை புதுபித்தல் பணி | ரூ. 140.00 |
| 2 | ஆனந்த தியேட்டர் ரோடு, காமராஜ் காலனி ரோடு, வல்லம் ரோடு 1 (ம) 2, பேருந்து நிலைய பின்பக்க சாலை, கீழ ரத வீதி, மேற்கு ரதவீதி, வடக்கு ரத வீதி (வார்டு எண்.11,12,2 மற்றும் 4) தார் சாலை புதுப்பித்தல் பணி | ரூ.132.00 |
| 3 | அண்ணாத் தெரு, அண்ணா நகர் தெருக்கள், பள்ளிவாசல் தெரு மற்றும் எஸ்.ஆர்.கே.தெரு (வார்டு எண். 17,21, 12) பேவர் பிளாக் பதிக்கும் பணி | ரூ. 100.00 |
| 4 | சாமியார், காலசாமி தெரு, வெள்ளையன் தெரு, காமாட்சி அம்மன் கோவில் தெரு, புலவர் தெரு மற்றும் ஆறுமுகசாமி ஒடுக்கம் சாலை (வார்டு எண்.18, 17, 13, 6) பேவர் பிளாக் பதிக்கும் பணி | ரூ. 128.00 |
| | மொத்தம் | ரூ.500.00 |

அலுவலககுறிப்பு.

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

ஆ) மேற்படி சாலைப்பணிகள் மேற்கொள்ள இந்நகராட்சியின் நிதிநிலைமை மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ளதால் அரசின் முழு மான்யமாக நிதி ஒதுக்கீடு செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.